

















நோவாவும் பெரிய வெள்ளமும்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 6–10

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

எழுதியவர் Edward Hughes
சித்தரிப்பவர் Byron Unger; Lazarus

மொழிபெயர்ப்பாளர் DASAN JEYARAJ
தழுவியவர் M. Maillot; Tammy S.

கதைகள் 60 ல் 3

**M1914.org**

**Bible for Children, PO Box 3, Winnipeg MB R3C 2G1 Canada**

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும்.
அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை
மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த
குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய
தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில்
மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும்
பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை
மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த
வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே
இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை
மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு
எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ
உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.

Tamil







ஒரு பெரிய வெள்ளம் வந்து இந்த பூமியை மூடும்
என்று நோவாவிடம் எச்சரிப்பு கொடுத்தார்.
“ஒரு பெரிய மரப்பேழையை உன்னுடைய
குடும்பத்திற்கும் அநேக பிராணிகளுக்கும்
உண்டு பண்ணு” என்று தேவன்
கட்டளையிட்டார்.
3


அந்தப் பேழையை எவ்வாறு உருவாக்க
வேண்டுமென்று தெளிவாக கற்பித்தார்.
நோவா வேலையை ஆரம்பித்தான்.
4


தன்னை பரிகாசம்
செய்த மக்களுக்கு,
ஏன் ஒரு பேழைக்குள்
உருவாக்குகிறேன்
என்று
விளக்கினான்.
நோவா கட்டிக்
கொண்டேயிருந்தான்.
தேவனைப் பற்றி
மக்களுக்குச் சொன்னான்.
ஆனால் ஒருவரும்
கேட்கவில்லை.
5


நோவாவிடம் பெரிய விசுவாசம்
காணப்பட்டது. இதுவரை
மழை பெய்யாதிருந்தும், அவன்
தேவனை விசுவாசித்தான்,
சீக்கிரமாகவே, தேவையான
பொருட்களை நிரப்பிக்
கொள்ள பேழை
தயாராகியது.
6


விலங்குகள் வந்து சேர்ந்தன. தேவன் ஏழுவிதமான
இனங்களையும், மற்றும் இரண்டு இனங்களையும் கொண்டு
வந்தார்.
7


பெரிய மற்றும் சிறிய பறவைகளும், மிகச் சிறிய மற்றும்
உயரமான விலங்குகளும் பேழைக்கு வந்து சேர்ந்தன.
8


விலங்குகள் வந்து சேர்ந்த போது, ஒரு வேளை
மக்கள் நோவாவை பரிகாசம் செய்திருக்கலாம்.
பாவம் செய்வதிலிருந்து மக்கள் விலகவில்லை.
அவர்கள் பேழைக்குள் செல்லவும்
விரும்பவில்லை.
9


கடைசியாக
எல்லா
விலங்குகளும்,
பறவைகளும்
பேழைக்குள் சென்றன.
“பேழைக்குள் வா” என்று
தேவன் “நோவாவையும், அவன்
குடும்பத்தையும் அழைத்தார்”.
10


நோவாவும்,
அவன்
மனைவியும்,
அவன் மூன்று
குமாரரும் அவர்களுடைய
மனைவிகளும் பேழைக்குள்
பிரவேசித்தார்கள். தேவன்
கதவை அடைத்தார்.
11


பின்பு மழை பெய்யத்
தொடங்கியது. நாற்பது
நாட்கள் இரவும், பகலும்
மழை பெய்து இந்த
உலகத்தை நிரப்பியது.
12


கிராமங்களையும்,
நகரங்களையும்
வெள்ளம் சூழ்ந்தது. மழை நின்ற
போது, மலைகள் கூட தண்ணீரின் கீழே
காணப்பட்டது. காற்றை சுவாசித்த
எல்லாமே மாண்டுபோயின.
13


தண்ணீர் உயர, உயர
பேழையானது மிதக்க
தொடங்கியது. பேழைக்குள்ளே
இருளாக காணப்பட்டிருக்கும்.
உலுக்கியிருக்கலாம். பயமாக
கூட இருந்திருக்கலாம். ஆனால்
பேழையானது நோவாவை
வெள்ளத்திலிருந்து
காப்பாற்றியது.
14


வெள்ளம் ஏற்பட்ட ஐந்து மாதத்திற்கு பின்னர்,
உலர்த்தும் காற்றை தேவன் வீசச் செய்தார்.
மெதுவாக, அரராத் மலையின் மேல்
பேழையானது தங்கியது. தண்ணீர்
குறையும் வரை
நோவா
இன்னும்
நாற்பது
நாட்கள்
தங்கியிருந்தான்.
15


பேழையின் ஜன்னலை திறந்து ஒரு காகத்தையும், புறாவையும்
வெளியே அனுப்பினான். இளைப்பாறுவதற்கு சுத்தமான
இடம் கிடைக்காததால் புறா நோவாவிடம் திரும்பியது.
16


ஒரு வாரத்திற்கு பின்னர்,
நோவா மறுபடியும் முயற்சி
செய்தான். புறாவானது ஒரு
ஒலிவ இலையை தன்னுடைய
அலகிலே கொத்திக் கொண்டு
வந்தது. அடுத்த வாரம் புறா திரும்ப
வராததினாலே, பூமி உலர்ந்தது
என்று நோவா அறிந்து
கொண்டான்.
17


தேவன் நோவாவிடத்தில் பேழையை விட
நேரம் வந்தது என்றார். நோவாவும், அவன்
குடும்பமும் மற்ற பிராணிகளுடன் வெளியே
வந்தனர்.
18